## வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் மூன்றாவது பொதுக்கூட்ட அறிக்கை
## 30.07.2025 மு.ப 10.00 மணி

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மூன்றாவது பொதுக்கூட்டம் 30.07.2025ம் திகதி மு.ப.10.00 மணியளவில் பிரதேசசபையின் சபா மண்டபத்தில் கௌரவ தவிசாளர் தியாகராசா பிரகாஷ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட கௌரவ உறுப்பினர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | தியாகராசா பிரகாஷ் | கௌரவ தவிசாளர் |
| 2. | செல்வரத்தினம் உதயகுமாரன் | கௌரவ உபதவிசாளர் |
| 3. | இரத்தினசிங்கம் அரிகரன் | கௌரவ உறுப்பினர் |
| 4. | சிவரூபன் லகீந்தன் | கௌரவ உறுப்பினர் |
| 5. | குணராஜா டெனிஸ் கமல்ராஜ் | கௌரவ உறுப்பினர் |
| 6. | கருணைநாதன் அபராசுதன் | கௌரவ உறுப்பினர் |
| 7. | செல்வராசா கஜேந்திரா | கௌரவ உறுப்பினர் |
| 8. | பாலசிங்கம் சுரேஸ்குமார் | கௌரவ உறுப்பினர் |
| 9. | தேவராஜா திருமுருகராஜன் | கௌரவ உறுப்பினர் |
| 10. | தவராசா துவாரகன் | கௌரவ உறுப்பினர் |
| 11. | திருச்செல்வம் அன்ரன் லீனஸ் | கௌரவ உறுப்பினர் |
| 12. | வரதராஜா தனகோபி | கௌரவ உறுப்பினர் |
| 13. | சிவபாதம் சிவசங்கர் | கௌரவ உறுப்பினர் |
| 14. | சந்திரவதனி காந்தராசா | கௌரவ உறுப்பினர் |
| 15. | முத்துலிங்கம் நவலோகராஜா | கௌரவ உறுப்பினர் |
| 16. | வயிரவநாதன் தமிழ்ச்செல்வன் | கௌரவ உறுப்பினர் |
| 17. | சுப்பிரமணியம் ரமேந்திரா | கௌரவ உறுப்பினர் |
| 18. | கோபிகாசக்தி நிஷாந்தன் | கௌரவ உறுப்பினர் |
| 19. | மனோகரன் பிரதீபன் | கௌரவ உறுப்பினர் |
| 20. | ஜெயசுதா சுபேஸ்கரன் | கௌரவ உறுப்பினர் |
| 21. | தர்மலிங்கம் சந்திரரஜினி | கௌரவ உறுப்பினர் |
| 22. | வேணுஜா கொன்சன் றொபேட் | கௌரவ உறுப்பினர் |
| 23. | டெலசா சுமல் | கௌரவ உறுப்பினர் |
| 24. | ரவிச்சந்திரன் யுகறாஜ் | கௌரவ உறுப்பினர் |
| 25. | செல்வன் றவியன் | கௌரவ உறுப்பினர் |
| 26. | அம்பிகைபாகன் ஜீவிதன் | கௌரவ உறுப்பினர் |
| 27. | அருள்ராசா றாஜ்நிமால் | கௌரவ உறுப்பினர் |
| 28. | தங்கத்துரை உதயராஜன் | கௌரவ உறுப்பினர் |
| 29. | சின்னராசா றஜீபா | கௌரவ உறுப்பினர் |
| 30. | நடராஜசுந்தரம் இராகவன் | கௌரவ உறுப்பினர் |

கூட்டத்திற்கு சமூகமளிக்காத உறுப்பினர் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | பாலசிங்கம் ஆதவன் | கௌரவ உறுப்பினர் |

கௌரவ தவிசாளரினால் அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்பட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக ஒரு நிமிட மௌன இறைவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதலிலே கௌரவ தவிசாளர் அவர்கள் கூட்டத்திற்கு சமூகமளித்த அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்று கொண்டார். தொடர்ந்து தனதுரையில் கௌரவ உறுப்பினர்கள் கூட்டத்திற்கு உரிய நேரத்திற்கு சமூகமளிக்க வேண்டும் எனவும் உறுப்பினர்களுக்காக நடாத்தப்படுகின்ற பயிற்சி வகுப்புக்களில் எல்லா உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும் பல்வேறுபட்ட அமைப்புக்களால் கௌரவ

உறுப்பினர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் ஒவ்வொரு விடயத்தலைப்புகளிலும் பயிற்சி வகுப்புக்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளமையால் அவற்றிலும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.
தொடர்ந்து சென்ற கூட்ட அறிக்கையை சபையின் அங்கீகாரத்தை கோரினார். திருத்தங்கள் இருப்பின் அதனை சபைக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் ர.யுகராஜ் அவர்கள் 2015ம் ஆண்டு மதவடியில் அமைக்கப்பட்டிருந்த பேருந்து தரிப்பிடமானது வீதி அகலிப்பின் போது இடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் குறித்த காணி உரிமையாளரால் தான்தோன்றித்தனமாக இடிக்கப்பட்டது என அறிக்கையில் மாற்றப்பட வேண்டும் எனக்குறிப்பிட்டார்.
கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்களால் கருணாகரப்பிள்ளையார் கோயில் குறுக்குவீதி புனரமைப்பு தொடர்பாக கௌரவ தவிசாளரினால் "பிரதேசசபை நிதியில் புனரமைப்பு செய்யப்படும் வீதிகள் பொது வீதியாகவே கருதப்படவேண்டும்" என்ற கருத்து பதிவுசெய்யப்படவில்லை எனவும் அது பதிவு செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார். கௌரவ உறுப்பினர் செ.கஜேந்திரா அவர்களும் 7ம் வட்டாரத்திலும் இரண்டு வீதிகள் சபைநிதியில் புனரமைக்கப்பட்டுள்ள போதும் தனிப்பட்ட வீதிபோன்று Gate அமைக்கப்பட்டுள்ளது என்ற விடயமும் பதிவு செய்யப்படவேண்டும் என்றார்.
தனது வட்டாரத்துக்கு அண்மையில் உள்ள தோட்ட வெளியில் பெருவெளி, ஈச்சந்தென்னை ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் கஞ்சா,போதை வஸ்து பாவனை அதிகமாக காணப்படுகின்றது தொடர்பில் கௌரவ உறுப்பினர் த.உதயராஜன் என்பதற்கு பதிலாக கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் J/182 யாமா வீதியில் ரூபா ஒன்றறை இலட்சம் தொடக்கம் இரண்டு இலட்சம் வரை மதிக்கதக்க மகோகனி மரம் தறிக்கப்பட்மை தொடர்பிலும் கௌரவ உறுப்பினர் த.உதயராஜன் என்பதற்கு பதிலாக கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவை இரண்டிலும் உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்களுக்குப்பதிலாக கௌரவ உறுப்பினர் த.உதயராஜன் என மாற்றம் செய்யப்படுகின்றது.
கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் மாநாட்டு மண்டபம் அழகுபடுத்தல் தொடர்பான தீர்மான இலக்கம் 22ல் ஏற்பட்ட செலவின விபரங்கள் குறிப்பிடப்படவில்லை எனவும், செலவின விபரங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என்றார். கௌரவ தவிசாளர் அவர்களால் கேட்டினுக்கு ரூபா 706,500.00 வும் காப்பற்றுக்கு ரூபா 503,370.00வும் வழங்குவது என தொகை தீர்மானத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்
தீர்மான இலக்கம் 23ல் இவ்வாண்டு வரவு செலவுத்திட்டம் மற்றும் அபிவிருத்தி ஒதுக்கீட்டு வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு வேலை முடிவடைந்த வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளுக்கான வேலை விபரங்களுடன் கூடிய தொகையை குறிப்பிட்டு கீழ்குறித்தவாறு கொடுப்பனவு வழங்குவது என தீர்மானம் மாற்றியடைக்கப்படுகிறது..

| இல | வேலைத்திட்ட விபரங்கள் | கோரப்படும் கொடுப்பனவுச் சிட்டைத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | செட்டிவளவு வீதி புனரமைத்தல் | 2,339,158.04 (including VAT) | KBS Engineering Solutions |
| 2 | ஏழாலை மில் வீதி உப வீதி அமைத்தல்<br>ஞானவைரவர் வீதி மிகுதி வேலை, குப்பிளான் வடக்கு<br>தம்பிப்பிள்ளை மணியகாரன், செல்லப்பா மணியகாரன் வீதியின் இணைப்பு வீதி புனரமைத்தல்,<br>புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 1,917,252.68 (including VAT) | KBS Engineering Solutions |
| 3 | வடலி அம்மன் முன் முதலாம் குறுக்கு வீதி , வெளிப்புலம் இரண்டாம் குறுக்கு வீதி அமைத்தல், கடவைப்புலம் வீதி புனரமைத்தல் | 149,161.40 | Banusha Transport nilayam |
| 4 | கதிரமலை வீதி புனரமைத்தல் (கட்டம் 2) | 136,020.90 | New Generation builders |



CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| 5 | கதிரமலை வீதி புனரமைத்தல் (கட்டம் I-B) | 74,400.15 | New Generation builders |
| 6 | சபாபதி வீதி உப ஒழுங்கை அமைத்தல் | 64,462.90 | Banusha Transport Nilayam |

மேலும் கௌரவ உறுப்பினர் கு.டெனிஸ்கமல்ராஜ் அவர்களால் தீர்மானம் 11இல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரங்களை பிரதேச சபைமீது திணிக்கப்படுவதாக உள்ளது என்பதற்கு பதிலாக பிரதேச சபையின் அதிகாரங்களை பறிப்பதாக என அறிக்கையில குறிப்பிடவேண்டும் என குறிப்பிடப்பட்டது
மேற்காட்டிய திருத்தங்களுடன் இரண்டாவது பொதுக்கூட்ட அறிக்கை சரி என கௌரவ உறுப்பினர் சி.லகீந்தன் முன் மொழிய கௌரவ உறுப்பினர் பாலசிங்கம் சுரேஸ்குமார் வழி மொழிய சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
அடுத்து விசேட குழுக்கூட்ட அறிக்கையில் பா.சுரேஸ்குமார் அவர்களால் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக் குழுத்தலைவர் தெரிவின் போது தனது பெயரும் கௌரவ உறுப்பினர் கு.டெனிஸ் கமல்ராஜ் அவர்களின் பெயரும் முன்மொழியப்பட்டபோது நல்லெண்ண அடிப்படையில் தான் விட்டுக்கொடுத்தமையால் கௌரவ உறுப்பினர் கு.டெனிஸ் கமல்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார் எனவும் இதேபோல மகளிர் சிறுவர் அபிவிருத்திக்குழுவினது குழுத்தலைவர் தெரிவின் போது கௌரவ உறுப்பினர் நி.கோபிகாசக்தி மற்றும் கௌரவ உறுப்பினர் சி.றஜீபா ஆகிய இருவரது பெயர்கள் முன்மொழியப்பட்டது. எனினும் கௌரவ உறுப்பினர் கோபிகாசக்தி நிஷாந்தன் அவர்கள் மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்தமையை தொடர்ந்து கௌரவ உறுப்பினர் சி.றஜீபா தெரிவுசெய்யப்பட்டடார் என்ற விபரமும் சேர்க்கப்பட்டு விசேட கூட்ட அறிக்கை சரியென கௌரவ உபதவிசாளர் செ.உதயகுமாரன் முன்மொழிய கௌரவ உறுப்பினர் மு.நவலோகராஜா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்களால் சாரதிகளின் இடமாற்றம் தொடர்பான தீர்மானத்தின் தொடர் நடவடிக்கையாக சாரதிகளுக்கு இடமாற்றக்கடிதம் செயலாளரால் வழங்கப்படவில்லை என குறிப்பிட்டார். கௌரவ தவிசாளர் கருத்து தெரிவிக்கையில் கடிதத்தினை வழங்குமாறு இரண்டு தடவைகள் குறிப்பிட்டபோதும் வழங்கப்படவில்லை இவ்விடயம் குறித்து குறித்த கடிதத்தினை தான் வழங்குவதாக குறிப்பிட்டார். தொடர்ச்சியாக கடந்த பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பிலான தொடர் நடவடிக்கை குறித்து ஆராயப்பட்டது.
கடந்த விசேட கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட சுன்னாகம் உப அலுவலகத்தில் கழிவகற்றல் கட்டணமாக ரூபா 2000.00 அறவிடப்பட்டு ரூபா 500.00 பெறுமதியான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டமை தொடர்பில் கௌரவ உறுப்பினர்களான கு.டெனிஸ்கமல்ராஜ், அ.றாஜ்நிமால், ர.யுகறாஜ் ஆகியோர் உப அலுவலகத்திற்கு சென்று பார்வையிட்டதாகவும் அது தவறான வகையில் அது சபையில் முன்வைக்கப்பட்டதாகவும் அதாவது ரூபா 500.00 மற்றும் ரூபா 2000.00 என இரண்டு பற்றுச்சீட்டுக்கள் இடப்பட்டதுடன், அவை மாற்றி வழங்கப்பட்டதாகவும், இரண்டாவதாக இடப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி பற்றுச்சீட்டு(copy receipt) உப அலுவலக பொறுப்பதிகாரிக்கு தெரியாமல் இடப்படப்பட்டது மற்றும் சபைக்கு தவறாக அது தெரியப்படுத்தியமையுமே தவறு என குறிப்பிட்டதுடன் அவை தொடர்பில் உறுப்பினர்களிடையே வதாப்பிரதிவாதங்கள் இடம்பெற்றபோது கௌரவ தவிசாளர் அவர்கள் தான் நேரடியாக சென்று பார்வையிடப்பட்டதாகவும் முறைகேடுகள் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தமையால் அது தற்போது தன்னால் சீர்செய்யப்பட்டுள்ளதாகவும் சபைக்கு அறியத்தந்தார். மேலும் உள்ளகவிசாரணை அறிக்கையும் முறைகேடுகள் இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.
நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அடுத்த விடயமாக கட்டடஅனுமதி வழங்குவது தொடர்பில் உள்ளுராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் தொடர்பில், கொரவ தவிசாளர் அவர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளருடன் கலந்துரையாடி உள்ளதாகவும் அதனடிப்படையில் சபைஎல்லைக்குட்பட்ட வகையில் UDA இன் விதிமுறைகளுக்கு அமைய UDA இன் இணக்கப்பாட்டுடன் கட்டட அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அது தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளருக்குரிய பதிலை தான் வழங்குவதாகவும் தெரிவித்தார்.



CamScanner

அடுத்ததாக PSDG நிதியில் சுன்னாகம் பஸ்நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா எட்டு இலட்சமும் கேள்வி கோரலை இரத்துச்செய்தமையால் வேறு சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வருட நிதியில் எமது சபைக்கு ஒதுக்கீடு செய்துதருவதாக குறிப்பிட்டுள்ளதாக கூறினார். மேலும் அந்நிதி பஸ்நிலையத்தில் படி அமைப்பதாக இருந்ததாகவும் அதுதேவையில்லை வர்ணம் பூசுவதற்கு நிதியை பாயன்படுத்துவோம் என கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார். மேலும் கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்கள் சென்ற காலத்தில் இருந்த சபையின் தவறான தீர்மானத்தால் பாலூட்டும் தாய்மாருக்கான அறை அளவுக்கு மேலதிகமாக அமைத்து சபைநிதியை வீணடித்துள்ளதாகவும் குறிப்பிட்டு அதனை சிறந்த முறையில் வடிவமைக்க வேண்டும் என்றார். கௌரவ உறுப்பினர் கா.சந்திரவதனி அவர்கள் கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்களின் கருத்தை ஏற்றுக்கொண்டதுடன் பாலூட்டும் தாய்மாருக்கான அறை அவசியமானது என குறிப்பிட்டார். கௌரவ உறுப்பினர் ர.யுகறாஜ் அவர்கள் பஸ் நிலையத்தில் உள்ள கச்சான் கடை அகற்றப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கொத்தியாலடி திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் மாவட்ட செயலகம், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் எமது சபையினது பங்களிப்புடன் எமது சபைக்குரிய சுன்னாகம் சுழலும் உயிரியல் ஆலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இதற்குரிய நிதி மாவட்ட செயலகத்தினால் வழங்கப்படும் எனவும் குறித்த திட்டம் செயல்படும் பொழுது ஆறுமாதங்களுக்கு அல்லது ஒருவருடத்திற்கோ இயங்கச்செய்வதுடன் எமது ஊழியர்களுக்கு அது தொடர்பான பயிற்சிகளை வழங்கி திட்டத்தினை எம்மிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் தொடர்ந்து இயங்கச்செய்வதாக கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்டது. கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்களால் கடந்த சபைக்காலத்திலும் இயங்காத ஆலைக்கு ரூபா ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட தொகையை மின்சாரக்கட்டணமாக செலுத்தியதாகவும் முறையாக இயங்காமல் சபை பெறுப்பெடுக்க வேண்டாம் எனவும் குறிப்பிட்டார். கௌரவ தவிசாளர் அவர்களால் இது தொடர்பாக பொது சுகாதாரப் பரிசோதகரிடம் கலந்துரையாடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது என்றும் இதேபோல சிறியளவிலான Plant தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் இடம் மட்டுமே நாங்கள் கொடுக்கப்போகின்றோம் இயங்கச்செய்து எமது அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கும் வரை வலிகாமம் பகுதியிலுள்ள மலக்கழிவுகளை கட்டணம் அறவிட்டு கொடுப்போம் அவர்கள் பரிகரித்து வழங்குவார்கள். அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்றார். கௌரவ உறுப்பினர் சி.லகிந்தன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் மலக்கழிவுகளை கொண்டுபோய் கல்லுண்டாய் பிரதேசத்தில் கொட்டியது தொடர்பில் பராமரிப்பு செலவை எமது சபை, நல்லூர் பிரதேசசபை போன்ற நான்கு சபைகள் செலுத்த வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பு ஒன்று உள்ளது எனவும் நீதிமன்றம் அதனை கட்டளையாக ஆக்கியுள்ளதாகவும் அது தொடர்பாகவும் ஆராயுமாறு குறிப்பிட்டார். இதன் போது கௌரவ தவிசாளர் மேற்குறித்த நீதிமன்ற நடவடிக்கை தற்போது முடிவுறுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

கௌரவ தவிசாளர் அவர்களால் இந்த வருட வரவுசெலவுத் திட்டத்தில் அபிவிருத்தி ஒதுக்கத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில் தலைமை அலுவலகத்திற்கு மின்தூக்கி பொருத்துதல், மின் பிறப்பாக்கி கொள்வனவு செய்தல், online payment செய்வதற்கான வசதிகளை மேற்கொள்ளல், தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை நிகழ்நிலைப்படுத்தி கண்காணித்தல் தொடர்பாக பொறிமுறை ஒன்றை உருவாக்குதல் ஆகியவை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடந்த விசேட கூட்டத்தில் கோரப்பட்ட விடயங்களுக்கு பதில்கள் கௌரவ தவிசாளரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. மாநாட்டு மண்டபத்துக்க குளிரூட்டி திருத்தியமை தொடர்பில் ஏற்பட்ட செலவினமாக கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்களால் கோரப்பட்டதற்கான பதில் வழங்கப்பட்டது. கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்களால் மொத்தமாக எவ்வளவு செலவு ஏற்பட்டது என வினவியபோது VAT உட்பட 12 இலட்சத்துக்கு மேல் செலவு ஏற்பட்டுள்ளதாக செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்கள் செலவு விபரம் மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பாக கருத்துரைத்தபோது இத்திருத்த நடவடிக்கையில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனக்குறிப்பிட்டார். பல கௌரவ உறுப்பினர்களிடையே AC திருத்தியமை தொடர்பாக விசாரணை கோரவேண்டும் என்ற கருத்து மேலோங்கிக்காணப்பட்டது. இவ்விடத்தில் கருத்து தெரிவித்த கௌரவ உறுப்பினர் சி.லகிந்தன் அவர்கள் உள்ளூராட்சி ஆணையாளரின் விசாரணையை கோராது இலஞ்ச ஊழல்



CamScanner

ஆணைக்குழுவின் விசாரணையை கோருமாறு சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த கேள்வியாக ஏரம்பு துரையப்பா என்பவர் ¾ காணி கிணறு அமைப்பதற்காக ஈவினை கிராமோதய சபைக்கு வழங்கப்பட்டது. இதன் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றார். இவ்வாதனத்திற்குரிய ஆவணங்கள் இதுவரை பெறப்படவில்லை எனவும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செயலாளரால் குறிப்பிடப்பட்டது.

தொடர்ந்து கொத்தியாலடி குப்பைமேடு அகற்றியமை தொடர்பான உள்ளூராட்சி ஆணையாளரின் விசாரணை அறிக்கையில் ஊழல் இடம்பெறவில்லை என்றே உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்கள் தெரிவித்ததுடன் இந்த அறிக்கையில் தனக்கு திருப்தியில்லை எனவும் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் பல கௌரவ உறுப்பினர்கள் தமது அதிருப்தியை தெரிவித்துக்கொண்டனர். எனவே இதனையும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைக்கு அனுப்புவது என சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கௌரவ உபதவிசாளர் செ.உதயகுமாரன் அவர்கள் சிலவேளைகளில் சபையில் முறைகேடாக நிதியை செலவு செய்யப்பட்டிருந்தால் உறுப்பினர்கள் அதற்குரிய தொகையை கட்டவேண்டும். சபை இல்லாத போது ஏற்பட்ட இழப்பிற்கு யார் பொறுப்புக்கூறுவது என வினவினார். கௌரவ தவிசாளர் அவர்களால் சபை இல்லாத போது நிர்வாக கட்டளைகளை இயற்றி அதன்படிதான் செலவினை மேற்கொண்டிருப்பார்கள் எனவே அந்த நிர்வாககட்டளையை இயற்றி கொடுப்பனவை மேற்கொண்டவர்கள் தான் பெறுப்பெடுக்க வேண்டும் என்றார்.

அடுத்து கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்குரிய பாரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக ஆலோசனை நிறுவனம் ஒற்றை பத்திரிக்கை விளம்பரம் மூலம் கோரியுள்ளோம். online மூலமாகவும் கடிதம் மூலமாகவும் பலர் விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களது அனுபவத்தை பார்த்து செய்யவுள்ள வேலைத் திட்டங்களை வழங்கி யார் குறைந்தளவிலான சதவீதத்தை கோருகின்றார்களே அந்நிறுவனத்தினை தெரிவு செய்வோம் என்றார். இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்குரிய பெறுகைக்குழு வழமையான பெறுகைக்குழு ஆலோசகர் கேள்வி மதிப்பபீட்டுக்குழுவின் (BEC) தவிசாளராக பொறியியலாளர் திரு.உ.தனசிறி கட்டடங்கள் திணைக்களம் வடக்கு மாகாணம் அவர்களும், வேலைநிர்மாண அத்தியட்சகர் W.போல்கிறிஸ்ரன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் சி.தனுசன் வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஆகிய இருவரும் உறுப்பினர்கள் ஆக தெரிவு செய்துள்ளதாக குறிப்பிட்டார். ஆலோசனைக்குழுவின் ஆலோசனை வழங்கும் வேலையின் தொகைக்கு ஏற்பசதவீதத்தில் கொடுப்பனவு வழங்குவது என குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்கள் பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்த போது தற்கால அரசாங்கம் கிராம அபிவருத்திச்சங்கம், மாதர் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் கூட்டங்களுக்கு தங்களுக்கு சார்பானவர்களை வைத்தே நடாத்துகின்றார்கள் என்றார். இதன்போது கருத்து தெரிவித்த கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்களும் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கடிதத்தலைப்பை முறையற்ற வகையில் பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டார். இது தொடர்பில் கௌரவ உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றது. இதன் போது கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்களால் கைத்தொலைபேசி மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்ட போது அனுமதி பெற்று ஒளிப்பதிவு செய்யப்படவேண்டும் என கௌரவ தவிசாளரால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் சபைக்கு பொருத்தமில்லாத, தேவையில்லாத விடயங்களையும் தயவுசெய்து சபையில் கதைக்க வேண்டாம் என கௌரவ உறுப்பினர்களை விநயமாகக் கேட்டுக்கொண்டார்.

அடுத்த விடயமாக முடிவடைந்த வேலைகளுக்கான கொடுப்பனவு அனுமதி சபையில் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது ஈவினை இந்துமயான கொடுப்பனவு தொடர்பில் கௌரவ உறுப்பினர் இ.அரிகரன் அவர்கள் உரிய முறையில் தற்போது கட்டப்பட்டுள்ளபோதும் சரியான எல்லையில் கட்டப்படாமல் அண்ணளவாக ஒரு முழம் உள்நோக்கி கட்டப்பட்டுள்ளது என்றார். மிகுதி மதில் கட்டப்படவேண்டியுள்ளது எனவும் அது என்ன அடிப்படையில் அமைக்கவுள்ளதாகவும் கோரினார். இதே எல்லையில் தொடர்ந்து கட்டினால் ½ பரப்புக்காணி போய்விடும் என்றார். கௌரவ தவிசாளர் கருத்து கூறுகையில் தொழில்நுட்ப உத்தயோகத்தரும், செயலாளரும் சரியான எல்லையில் அத்திவாரம் போடமுடியாமல் பொறிவு காணப்பட்டதாகவும் அதில் அத்திவாரம் போட்டால் மதில் உறுதியாக



CamScanner

நிற்காது எனக் குறிப்பிட்டனர் என்றார். ஆனால் உண்மையில் சுடலைக்கு சொந்தமான காணி குறைவடைவதாக குறிப்பிட்டார். சபையில் கௌரவ உறுப்பினர்களிடையே இது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்று இறுதியாக கொடுப்பனவு மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது. எனினும் மிகுதி மதில் சரியான எல்லையில் அமைக்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்கள்.
வாகனத்தரிப்பிடம் அமைத்தல் சுன்னாகம் உப அலுவலகம் இது தொடர்பில் கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் சுன்னாகம் சந்தை கொட்டகை நடுவில் தூண் நடாமல் அப்படியே அடைத்திருந்தால் 25 வாகனங்கள் விடலாம் என்றும் செலவை மீதப்படுத்தியிருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.
பூவோடை இந்துமயானம் நுழைவாயில் கதவு அமைத்தல், ஆலங்கட்டை தோட்டவீதி அமைத்தல், ஏழாலை வடக்கு, கலைமகள் வீதியின் உப வீதி அமைத்தல், ஈவினை அறுமன் கலட்டி வீதி 1ம், 2ம் குறுக்கு வீதி அமைத்தல், ஏழாலை தெற்கு குருந்தடி வீதி புனரமைத்தல், ஏழாலை தெற்கு, தர்மலிங்கம் வீதி அமைத்தல் - கட்டம் -1-A, பூவோடை 2ம் ஒழுங்கை அமைத்தல், சிவபூதவராஜர் 5ம் ஒழுங்கை அமைத்தல்,மயான வீதி 1ம் ஒழுங்கை உப ஒழுங்கை வீதி அமைத்தல், கந்தரோடை கதிரமலை வீதி 4ம் ஒழுங்கை அமைத்தல் (இடது பக்கம்) ஆகியவற்றுக்கு கொடுப்பனவு வழங்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்கள் செட்டிவளவு வீதிக்கு ½ அடி Solder போட்டால் நல்லது எனக்குறிப்பிட்டார். கௌரவ தவிசாளர் அவர்களால் ½ அடி Solder போட்டால் மழைக்கு கரைந்துவிடும் Solder போட்டால் 1 அடிக்கு போடவேண்டும் எனக்குறிப்பிட்டார். மேலும் கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்கள் தர்மலிங்கம் வீதியில் இடையில் ஏறத்தாழ 100 மீற்றர் தூரம் வீதியோரத்தினை துப்பரவு செய்து (Roadside clearing) தருமாறு கோரினார். வீதிப்புயத்தனை அமைக்க முன்னர் (Solder) வீதியோரத்தினை துப்பரவு (Roadside clearing) செய்து வீதிப்புயத்தனை அமைக்குமாறு கௌரவ தவிசாளர் குறிப்பிட்டார்.
கௌரவ தவிசாளர் அவர்களால் உள்நாட்டு இறைவரித் திணைக்களதத்திற்கு 2017ம் ஆண்டு 01.01.2017- 31.03.2017 காலப்பகுதிக்கு தண்டத்துடன் ரூபா 262,335.98 மற்றும் 01.07.20217 – 30.09.2017 காலப்பகுதிக்கு தண்டத்துடன் ரூபா 203,829.98 ஆகியவற்றில் தண்டப்பணம் தவிர்ந்த வற் வரிக் கொடுப்பனவு தொகையான ரூபா 203,926.00 மட்டும் சபையால் செலுத்துவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2021ம் ஆண்டு மருதனார்மடம் சந்தைகடை அறவீடு 3 மில்லியன் ரூபா இன்னும் அறவிடப்படவில்லை. முந்தைய சபையால் கொரோனா தொற்றுநோய் காலப்பகுதியில் வரிவிலக்கழிப்பு வழங்கப்பட்டது எனக்குறிப்பிடப்பட்டது.
வெளிவாரி அடிப்படையில் சுன்னாகம், ஏழாலை, உடுவில் ஆகிய நூலகங்களுக்கு நூலக உதவியாளர்களை கேள்விகோரி ஒருவருடகாலப்பகுதிக்கு ஒப்பந்தம் செய்வது என சபையில் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்கள் வவுச்சர் கொடுப்பனவுகள் மட்டுமே தரப்பட்ட கணக்கறிக்கையில் உள்ளதாகவும் கணக்கு அறிக்கை முழுமையாக முதலே தரப்பட்டால் வாசித்துவர இலகுவாக இருக்கும் என கௌரவ தவிசாளரிடம் கோரினார்.
கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்கள் தனது பிரேரனையாக சபையின் பெயரில் உள்ள நிலையான வைப்பை கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்று உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைப்பது தொடர்பில் உரையாடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கௌரவ தவிசாளர் அவர்களால் நாங்கள் தெரிவுசெய்யவுள்ள பாரிய திட்டங்களுக்கான ஆலோசணைக்குழுவின் ஊடாக இத்திட்டத்திற்கான சாத்தியம், சர்வதேச தரத்திற்கமைய அமைக்கப்படுவதற்கான செலவுகள் மற்றும் அதன் மூலம் சபைக்கு வரும் வருமானம், இளைஞர், யுவதிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் போன்றவை உள்ளடங்கலாக முழுமையான திட்டவரைபுடன் கௌரவ ஆளுநரிடம் சமர்ப்பித்தால்தான் அனுமதி பெறமுடியும் எனவும் குறிப்பிட்டார்.
அடுத்த பிரேரணையாக கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் கந்தரோடை விகாரையை அண்மித்த வகையில் வாகனத்தரிப்பிடம் அமைப்பது தொடர்பாகவும், அதனை ஒழுங்குபடுத்தி கட்டணம் அறவிடுவது தொடர்பாகவும் குறிப்பிட்டார். இதன் போது கௌரவ உறுப்பினர் ச.லகிந்தன் அவர்களால் விகாரைக்கு முன்பாக தனிச்சிங்களத்தில் அறிவித்தல் பலகை ஒன்று வைக்கப்பட்டு விகாரை அமைப்பதற்கான நிதி சேகரிப்பதாகக் குறிப்பிட்டார். ஆயினும் தற்போதைய அரசாங்கம் இனப்பரம்பலை மாற்றியமைக்கக்கூடிய வகையில் விகாரை அமைக்கப்படமாட்டாது என குறிப்பிடப்பட்ட போதும் விகாரை அமைக்கப்படுவதாகவும் இதனை உரிய தரப்புக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.



CamScanner

மேலும் கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் விகாரை நிர்வாகத்தினரால் அறவிடப்படும் வாகனதரிப்பிடத்திற்கான கட்டணங்கள் மற்றும் சிறிய கடை தொடர்பில் ஒழுங்குபடுத்தி வருமானம் திரட்ட வேண்டும் எனக்குறிப்பிட்ட போது கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்கள் சபை அவ்வாறு மேற்கொண்டால் நாங்கள் அவர்களின் செயற்பாட்டை அனுமதிப்பதாக அமையும் எனத் தெரிவித்தார். இதன் போது கௌரவ தவிசாளர் அவர்கள் மேற்குறித்த விடயத்தை இரு வகையில் கையாளவேண்டும் எனக்குறிப்பிட்டதுடன் குறித்த பகுதியில் அண்மையில் ஜேர்மன் நாட்டைச்சேர்ந்தவர்களால் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது 3½ அடி உயரமான கிருஸ்ணர்சிலை ஒன்று கிடைத்ததாகவும் சைவ சமயத்தை சார்ந்த ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் குறித்த ஆய்வுப்பணிகள் இடைநிறுத்தியுள்ளதாகவும் இதனைக் கருத்திற்கொன்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் தொல்லியல் திணைக்களம் குறித்த பகுதியை தொல்லியல் பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதனால் குறித்த விடயத்தை கவனமாக கையாள வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்கள் தையிட்டி விகாரையும் மயிலிட்டியிலிருந்து சிறிய விகாரை வைத்து இதேபோல ஆரம்பித்து இன்று விஸ்வரூபமாக பாரிய வளர்ச்சியடைந்துள்ளது என்றார். இதைமுளையிலே கிள்ளவேண்டும் கட்டட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பதை வெளி உலகுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றார். விகாரைக்கு முன்னால் உள்ள காணியைத்தான் வாகனத்தரிப்பிடத்திற்காக பாவிக்கின்றார்கள். அது அரச காணி என்றார். கௌரவ தவிசாளரால் தனிநபர் கட்டணம் வசூலிப்பதை தடுக்கின்றதாகவும் கட்டட அனுமதி வழங்கப்படவும் இல்லை எனக்குறிப்பிட்டார். இது தொடர்பில் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் சபையின் ஆளுகைக்குட்பட்ட சுகாதார தொழிலாளர் சபைக்கு சொந்தமான தங்குமிடத்தில் தற்போது அதில் வசிப்பவர்களின் விபரங்கள் சுகாதார தொழிலாளி இல்லாமல் வேறு ஆட்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா? என்ற விபரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் சபை இல்லாத காலப்பகுதியில் குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் சமரசமாக தீர்க்கக்கூடிய வழக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் தற்போதுள்ள வழக்குகளின் விபரங்களையும் தெரியப்படுத்துமாறு கோரினார்.

அடுத்த பிரேரனையாக கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் சபையில் பாவனையின்றிக்காணப்படும் கழிவுறிஞ்சி வாகனம், நீர்தாங்கி என்பவற்றை கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்று அதனை ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்து புதிய கழிவுறிஞ்சும் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சபையின் எல்லைக்குள் காணப்படும் தனியார் நிறுவனங்களின் விளம்பர பதாதைகள் ஒட்டுதல் அல்லது காட்சிப்படுத்துதல் தொடர்பான அனுமதியை எடுப்பதற்கும் கட்டண அறவீட்டை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் பிரேரணை முன்வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த பிரேரனையாக கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் வீதியோரங்களில் கழிப்புக் கழிப்பதனை தடைசெய்து மயானங்களில் அதனை போடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், மரணகீதம் இசைக்கும் வாகனங்களுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் அவற்றிக்கான அனுமதியை சபையினூடாக வழங்கப்படல் வேண்டும், மற்றும் பழைய பொருட்கள் சேகரிக்கும் வாகனங்களும் சபையில் அனுமதியை பெற்று கொள்ளவேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் விளம்பரப்படுத்தி மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்குரிய பொறிமுறையை வருமானப்பரிசோதகர் மூலம் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றார். இவை தொடர்பில் தீர்மானங்கள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.
கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் கட்டாக்காலி நாய்களை பிடித்து சிவபூமி நாய்கள் காப்பகத்தில் விடுவது என குறிப்பிட்ட பொழுது அது இப்போது இயங்குவதில்லை என சபையோரால் குறிப்பிடப்பட்டது. கௌரவ உபதவிசாளரால் நாய்களுக்கு கர்ப்பத்தடை செய்வதை ஊக்குவிக்குமாறு குறிப்பிட்டார்.



CamScanner

கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் சபைக்குரிய சகல வாகனங்களுக்கும் சபையினுடைய பெயருடன் சபையினுடைய இலச்சினையையும் பொறித்த ஸ்ரிக்கர் ஒட்டுவது என்ற பிரேரணையையும், வெளிமாவட்டங்களில் இருந்து தற்காலிகமாக எமது பிரதேசத்தில் தங்கியுள்ளோர்களை பிரதேச செயலாளர் ஊடாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இராமநாதன் நுண்கலை துறையில் கல்விகற்கும் மாணவர்கள் பலர் மருதனார்மடம் பகுதிகளிலுள்ள வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்கள் காலையில் குப்பைசேகரிக்கும் வாகனங்கள் குப்பை சேகரிக்கும் போது வீடுகளில் நிற்பது குறைவு அதனால் வீதியோரங்களில் குப்பைகளை வீசுகின்றார்கள். இது தொடர்பில் நுண்கலைப்பீட பீடாதிபதிக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும் எனக்குறிப்பிட்டார். மாணவர்களுக்கு வீடுகளில் அறைகளை வாடகைக்கு விடுவது தொடர்பில் கௌரவ உறுப்பினர்களிடையே கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்று வாடகைக்கு விடுபவர்களிடம் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க இயலாது எனக்குறிப்பிடப்பட்டது.
அடுத்த பிரேரணையாக கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் வட்டாரத்துக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வட்டாரத்திலேயே தென்பகுதியல் அலுவலகங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல இங்குள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றுநிருபங்களின்படிதான் கடமையாற்றுகின்றனர் அவர்களை வட்டாரத்திற்குள் அதிக நேரத்தினை செலவு செய்வதற்கு ஏற்றவகையில் சனசமூக நிலையங்களில் அல்லது பொதுக்கட்டடங்களில் இருந்து கடமையாற்றுவதற்கும் அவர்களுக்கென்று சுற்றுநிருபத்தை கௌரவ தவிசாளர் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றார். கௌரவ உறுப்பினர் சி.லகிந்தன் அவர்களால் நல்லூரில் நடைபெற்ற செயலமர்வில் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மீள எடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டதாக குறிப்பிட்டார்.
கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் சபையினால் 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்ட கடைகள் 2011ம் ஆண்டு தங்களது பதவிக்காலத்தில் செய்தது போல் அதாவது 20 வருட வாடகையை முற்பணமாக செலுத்தினால் ஒப்பந்தத்தில் உள்ளவரின் சம்மதத்துடன் உரிமைமாற்றம் செய்து கொடுக்கப்பட்டது. அதனை மீண்டும் செய்வதற்கான பிரேரணையை சபையில் முன்வைத்தார். கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்களால் 20 வருட வாடகை முற்பணத்தினை 6 மாத தவணை அடிப்படையில் கட்டங்களாக செலுத்துவதற்கு வசதி ஏற்படுத்துமாறு கோரினார். கௌரவ தவிசாளரினால் முழுத்தொகையும் செலுத்தப்பட்டதன் பின்னரே உரிமை மாற்றம் செய்யப்படும் என்றார். இது தொடர்பரில் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் வட்டாரரீதில் செய்யப்படும் அபிவிருத்தி வேலைகளோ அல்லது அனுமதியற்ற கட்டடங்களுக்கு நோட்டீஸ் ஒட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் போதோ உத்தியோகத்தர்கள் தமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களால் பயணிகள் நிழற்குடை தொடர்பாக றொட்டியாலடியில் அமைப்பதற்கு பிரேரணை சமர்ப்பித்திருந்தேன் அதே இடத்தில் இன்னொருவருக்கு இலங்கை போக்குவரத்து சபை அனுமதி வழங்கியுள்ளது. ஏற்கனவே தமக்கு அனுமதி வழங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டார். கௌரவ தவிசாளரால் அது தொடர்பான ஆவணங்கள் இல்லையா என வினவியபோது தன்னிடமுள்ள பிரதிகள் அனுப்பியுள்ளதாக குறிப்பிட்டார். 2020ம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆவணமாகக் கொடுக்கப்பட்டது கோவை இல்லை என எவ்வாறு கூறமுடியும் என்றார். தன்னிடமுள்ள பிரதியை அனுப்புவதாகவும் அதனைக்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்குமாறும் கூறி கனகரட்னம் புஸ்பமலர் என்பவரால் அமைக்கப்படவுள்ள பயணிகள் நிழற்குடையை இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவுள்ள இடத்தினை சபையினது அனுமதிக்காக பிரேரணையாக முன்வைத்து சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள சபைக்குரிய வீதிகளுக்கு பெயர்பலகை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப்படல் வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தார் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார்



CamScanner

அவர்கள் Z- Lon கம்பனியிடம் கோரும் பட்சத்தில் அவர்களை கொண்டு இலவசமாக பெயர் பலகை நாட்டலாம் என்றார். கௌரவ தவிசாளரால் பிரதான வீதிகளுக்கு தான் அவர்களால் செய்யமுடியும் என Z- Lon கம்பனியால் குறிப்பிட்டதாக குறிப்பிட்டார். மேலும் கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்கள் வீதி விளக்குகள் பழுதுபார்க்கும் போது மின் குமிழ் மாற்றப்பட்டதா? வேறு உபகரணங்கள் மாற்றப்பட்டதா? என்பதை கண்காணிப்பதற்குரிய பொறிமுறைகளையும் உருவாக்கவேண்டும் என்றார். தொடர்ந்து மங்களநிகழ்வுக்கு பாடல்கள் இரவிரவாக இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு தொடர்ச்சியாக இசைக்கப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார். அதாவது இரவு நேரக்கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்றார். அடுத்த விடயமாக கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்களால் துப்பரவு செய்யப்படாத காணிகள், வீதிகள் துப்பரவு செய்யப்படவேண்டும் என்றும் இதனால் பாதீனியம் பெருக்கமடைந்து வளர்ச்சியடைவதுடன் டெங்கு நுளம்பு பரவல், மற்றும் கீரி போன்றன பெருக்கமடைந்து கோழி வளர்ப்பு போன்ற சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டார். இக்கருத்துக்களை வரவேற்றுக்கொண்ட கௌரவ உறுப்பினர் கு.டெனிஸ்கமல்ராஜ் அவர்கள் கௌரவ தவிசாளரிடம் தாங்கள் இதற்கு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை என்ன என்பதையும் வினாவினார். உதாரணமாக 10 மணிக்கு மேல் ஒலிபெருக்கி பாவனையை கட்டுப்படுத்துவது யார்? அதற்கு என்ன பொறிமுறை என வினவினார். கௌரவ தவிசாளர் அவர்களால் கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதும் நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைகளை முன்வைக்கவில்லை அதற்கான பொறுப்பினை நான் ஏற்று அதனை முன்னெடுக்கின்றேன் என்றார். மேலும் துப்பரவு செய்யப்படாத தனியாரது காணிகளுக்கு (சிகப்பு அறிவித்தல்) Red Notice ஒட்டி துப்பரவு பணிகளை முன்னெடுக்கலாம் என்றார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்கள் தனது பிரேரணையாக மருதனார்மடம் சந்தைக்குதான் அதிகமாக பணத்தினை செலவு செய்கின்றோம். சுன்னாகம் சந்தைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்றார். வாழைக்குலை சந்தையுள்ள காணியில் அம்மாச்சி உணவகம் ஒன்றை அமைத்து பிரதேச சபைக்கு வருமானம் ஈட்டலாம் என்றார். அமைப்பதற்கான நிதி ஏற்பாட்டையும் கௌரவ தவிசாளர் ஏற்படுத்தி தரவேண்டும் எனவும் குறிப்பிட்டார். கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்கள் அம்மாச்சி உணவகம் அதில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சியே தவிர அதன் மூலம் வருமானம் உழைக்கமுடியாது என்றார். இதே கருத்தையே பல உறுப்பினர்களும் கொண்டிருந்தார்கள். கௌரவ தவிசாளர் அவர்கள் அது ஒரு வர்த்தக வலயம் (Commercial area) என்பதால் அந்த இடம் பொருத்தமானதா என சாத்தியவள ஆய்வு செய்து (Feasibility study) அந்த இடத்தில் வியாபாரம் நடைபெறுமா? மக்கள் அங்கு வருவார்களா? என்பதை ஆராய்ந்து தான் முடிவு எடுக்கவேண்டும் என்றார். பல கௌரவ உறுப்பினர்களும் சுன்னாகம் பஸ் நிலையத்தில் அமைக்கலாம் என்ற கருத்தை முன்வைத்தனர். இறுதியாக சுன்னாகத்தில் ஏதாவது ஓர் இடத்தில் அமைத்துத்தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்கள் வலியுறுத்தினார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்களின் பிரேரணையாக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு மின்எரியூட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கு கனடா அபிவிருத்தி ஒன்றியம் முன்வந்துள்ளது அதற்கு சபை அனுமதி வழங்கவேண்டும் என்ற கோரிக்கை எற்றுக்கொள்ளப்பட்டு சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து மயான அபிவிருத்திசபை கூட்டம் இடம்பெறவில்லை என்றார். பொதுக்கூட்டத்தினை கூட்டி ஆர்வமுள்ளவர்களை நிர்வாகத்திற்கு உள்வாங்க வேண்டும் என்றார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்களின் பிரேரணையாக எமது சபைக்கு சிறியளவிலான தீயணைப்பு பொறிமுறை ஒன்று இயக்க வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட சபையினது கடைத் தொகுதிகளின் எண்ணிக்கை, மற்றும் கடை உரிமையாளர்களின் பெயர், தற்போத கடை நடாத்துபவர்களின் பெயர் விபரங்களையும் தருமாறு கோரினார். மேலும் பாய்கடை வியாபாரிகளின் அகப்பை களவு போனமை தொடர்பாக களவு நடைபெற்ற அடுத்தநாள் களவு பொருட்களுடன் களவெடுத்தவரை உப அலுவலகத்தில்

ஒப்படைத்த போது பொருட்களை வாங்கிவிட்டு செயலாளர் ஊடாக தங்களுக்க கடிதம் ஒன்னை அனுப்பியுள்ளார்கள். ஆனால் போலீஸில் அவர்களை ஒப்படைத்திருக்க வேண்டும் என்றார். குறித்த விடயம் தற்போது போலீஸிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக செயலாளரால் குறிப்பிடப்பட்டது. தொடர்ந்து வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சி ஆனையாளரால் அல்லது செயலாளரால் வழங்கப்பட்ட கடமைப்பட்டியலை வழங்கியுதவுமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்கள் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் உள்ள கான் வீதிதிருத்தத்தின் போது பல பகுதிகள் சேதமடைந்துள்ளமையால் நீர் தேங்கி நின்று அதனால் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு பெருக்கமடையும் சாத்தியமும் உள்ளது. எனவே நீர் தேங்கி நிற்காது செல்லக்கூடிய வகையில் சுகாதார குழுவூடாக இதற்கான ஏற்பாட்டை செய்து தருமாறு கோரினார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்கள் பாடசாலையில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு கட்டணம் இல்லாமல் அகற்றுவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்து தருமாறு கோரினார். தொடர்ந்து சுன்னாகம் நகர்பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகவுள்ளது. வாகன தரிப்பிடவசதிளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றார். கௌரவ தவிசாளர் அவர்களால் அதற்குரிய இடவசதிகள் ஏதும் உண்டா எனவினவிய போது சுன்னாகம் வாழைக்குழை சந்தையில் கட்டடங்களை அமைக்கும் வரை வாகனத்தரிப்பிடமாக பயன்படுத்தலாம் என்றார். கௌரவ தவிசாளரால் அது எவ்வளவு தூரம் சாத்தியமானது எனவினவியபோது கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்கள் திட்டமிடல் குழுவுடன் இது தொடர்பில் ஆலோசிக்கலாம் என்றார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் பா. சுரேஸ்குமார் அவர்கள் வீதியோர வியாபாரங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதாக குறிப்பிட்டார். அதனை வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான பரிசோதர்கள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் த.உதயராஜன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில் புதுமடத்தில் அமைந்துள்ள “யசிந்தா கரம் சுண்டல்” க்கு அனுமதி வழங்கப்பட்டதா? அதற்கு பக்கத்திலுள்ள கிணற்று நீரில் மலசலகூட கழிவுகள் கலப்பதால் நீரானது அசுத்தமடைந்துள்ளது என்றார். இதன் போது கருத்து தெரிவித்த கௌரவ உறுப்பினர் தி. அன்ரன் லீனஸ் அவர்கள் பொது சுகாதார பரிசோதகரிடம் குறித்த விடயத்தை நேரடியாக சென்று பார்க்குமாறு தெரியப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார். அடுத்ததாக கௌரவ உறுப்பினர் த.உதயராஜன் அவர்களால் அனுமதியற்ற கட்டப்படும் கட்டடங்களுக்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். அடுத்ததாக 14ம் வட்டாரத்தில் கர்த்தர் கோயில் பின்பக்க பாதை முன்னர் வண்டில் எல்லாம் போகக்கூடியதாக அகலமானதாக இருந்தது. இப்போது வாகனங்கள் செல்லமுடியாது நடையாதையாக பாவிக்கக்கூடிய பாதையாக அடைக்கப்பட்டுள்ளது என்றார். சுமார் 15 குடும்பங்களுக்கும் அதிகமானோர். இந்தப் பாதையை பாவிப்பதாக குறிப்பிட்டார். மேலும் GTZ வீதி பலகாலமாக போடப்படாமல் உள்ளதாக குறிப்பிட்டார். அத்துடன் முன்பள்ளி ஒன்று பலவருடங்களாக இயங்கவில்லை என்றும் கட்டடம் உள்ளதாகவும் அதனை மீள இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்குறிப்பிட்டார். கௌரவ தவிசாளர் அவர்களால் மீள இயக்கினால் பிள்ளைகள் வருவார்களா? என வினவி அடுத்த ஜனவரியில் இருந்து இயங்கச் செய்வதற்கு முன்பள்ளி இணைப்பாளர் மற்றும் தொடர்புடையவர்களுடன் கலந்தாலோசிப்பதாக குறிப்பிட்டார். மேலும் முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவுப்பொதி வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார். தொடர்ந்து கௌரவ உறுப்பினர் த.உதயராஜன் அவர்களால் சனசமூக நிலையமும் இயங்காமல் உள்ளதாகவும் அதனையும் மீளஇயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கமாறு கேட்டுக்கொண்டார்.

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் ர.யுகராஜ் அவர்களால் சுன்னாகம் ஐயனார் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள கோழி இறைச்சிக்கடையை (ரவிபாம்) இடம் மாற்றவேண்டும் என சனசமூக நிலையங்கள் மற்றும் ஊர்மக்கள் கையெழுத்துடன் கடிதம் தந்துள்ளதாக குறிப்பிட்டார். கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார் அவர்களும் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் ஐயனார் கோயில் கும்பாபிஷேகத்தின் பொழுது நான்கு நாட்களுக்கு கடையை மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு கோரியிருந்த போதும் கடை உரிமையாளரால் கடை பூட்டப்படவில்லை என்றார். இது தொடர்பில் கௌரவ உறுப்பினர்கள் பலரும் கோழி வளர்ப்புக்கு

தான் அனுமதி வழங்கியது இறைச்சிக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனக்குறிப்பிட்டனர். எனினும் அனுமதிக் கடிதம் வாசிக்கப்பட்டபோது இறைச்சிக்கும் அனுமதி வழங்கப்ட்டுள்ளது என்பது தெரியவந்தது.

கௌரவ உறுப்பினர் க.அபராசுதன் அவர்களால் குனநாயகம் என்பவரது காணி விடயம் தொடர்பாக கட்ட அனுமதிக்கு விண்ணப்பித்தபோது தங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு நன்றி கூறுமாறு சொன்னதாகவும் அதேநேரம் ஏழாலை உபஅலுவலகத்தால் அந்த விடயம் சீராக செய்து தரப்படவில்லை என்பதை சபைக்கு தெரியப்படுத்துமாறு சொன்னதாக குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் மு.நவலோகராஜா அவர்களால் கந்தரோடைப்பகுதியல் சலவைத் தொழிலாளர்கள் சலவைத்தொழில் செய்யும் குளம் ஒன்று உள்ளதாகவும் ஏறத்தாள 8 பயனாளிகள் பயன்படுத்திக்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். மேலும் 2011ம் ஆண்டு சபையால் கொட்டகை அமைத்துக்கொடுக்கப்பட்டது. மண்ணரிப்பு ஏற்படுவதால் சுவர் ஒன்று கட்டித்தருமாறு கோரியுள்ளதாகவும் ஆகாயத்தாமரையை அகற்றி குளத்தை ஆழப்படுத்தி அழகுபடுத்தி தருமாறு கோரினார். கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்களும் குளத்தினை சுற்றுலா தலமாக மாற்றக்ககூடிய வகையில் சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அறிவித்து அதனை செய்ய வேண்டும் என்றார்.

கௌரவ உறுப்பினர் தி.அன்ரன்லீனஸ் அவர்களால் ஞானப்பிரகாசம் வீதி ஒழுங்கைகளுக்கு சரியான முறையில் பெயர்பலகை இடப்படவில்லை என்றார். இதன் போது கருத்து தெரிவித்த கு. டெனிஸ்கமல்ராஜ் அவர்கள் பிரதேச சபை வீதிகளுக்கு பெயர்பலகை அமைப்பதுடன் வர்த்தமானியிலும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். கௌரவ தவிசாளர் அவர்களால் இனி கேள்வி கோரும் போது மதிப்பீட்டில் இணைப்பு வீதியாயின் தொடக்கத்திலும் முடிவிலும் என இரண்டு பெயர் பலகையும், தனிவீதி எனின் ஒரு பெயர் பலகையும் மூன்று மொழிகளிலும் வைக்கவேண்டும் என நிபந்தனை விதிக்கப்போவதாக குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்களால் சிங்கத்தின் கலட்டிவீதி பெயர் மாற்றம் செய்யப்பட்டு Dr.ரகுபதி வீதி என மாற்றம் செய்யப்பட்ட போதும் வீதியின் ஒருபக்கத்தில் சிங்கத்தின் கலட்டிவீதி பெயர் பலகை பொருத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து கௌரவ உறுப்பினர் தி.அன்ரன்லீனஸ் அவர்களால் நடைபாதை வியாபாரிகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறிப்பிட்டு அதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார். அடுத்ததாக பயணிகள் நிழற்குடை அமைக்க அனுமதி வழங்கும் பொழுது காலம் முழுவதும் அவர்களால் பராமரிக்கப்படுவதை உறுதிப்படுத்திய பின்னர் அனுமதியை வழங்குமாறும் குறிப்பிட்டார். மருதனார்மடம் சந்தையில் பல தேவைகள் உள்ளதாகவும் அவற்றையும் சீர்செய்து தரவேண்டும் எனவும் J/182 பிரிவில் கர்த்தர் கோயில் பின்பக்க பாதை கடந்த சபைக்காலத்தில் கோரிக்கை முன்வைத்தும் தீர்க்கப்படவில்லை நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரினார்.

கௌரவ உறுப்பினர் கா.சந்திரவதனி அவர்களால் தாவடி மயானவீதி - பானப்பாய் வீதி முடிவில் தனிநபரின் காணி போதிய பராமரிப்பு இன்றிக்காணப்படுகின்றமையால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும் வீதியின் முடிவில் வீதி பள்ளமாக காணப்படுவதால் வெள்ளம் நிற்பதாகவும் அதனை திருத்தம் செய்து தருமாறும் கோரிக்கையை முன்வைத்தார்.

அதேபோல சிங்கத்தின் கலட்டி வீதியின் முடிவில் வீதி பள்ளமாக உள்ளதாகவும் மழைகாலத்தில் வெள்ளம் நிற்பதுடன் வீடுகளுக்கும் வெள்ளநீர் புகுவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் 15ம் வட்டாரத்தில் பல காணிகள் பற்றைகள் வளர்ந்து பராமரிப்பு இன்றிக் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால் அவர்கள் சுன்னாகத்தில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபனம் ஒன்றை அமைப்பதற்கு பொருத்தமான கடைஒன்றை கோரினார். இணுவில் பகுதியில் அமைக்கப்படவுள்ள கடைத்தொகுதியில் ஒருகடையை வழங்கலாம் என பல உறுப்பினர்கள் குறிப்பிட்டனர். கௌரவ உறுப்பினர் த.துவாரகன் அவர்கள் உடுவில் உப அலுவலகத்துக்கு பக்கத்தில் உள்ள பகுதியை வழங்கலாம் என குறிப்பிட்டார்.



CamScanner

கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன் அவர்களால் சபையில் 31 உறுப்பினர்கள் உள்ளோம் ஒவ்வொருவரும் ஒன்று இரண்டு பிரேரணைகள் தந்தால் கூட்டத்தில் உள்ளக்கக் கூடியதாக இருக்கும் என்றார்.

அடுத்து பொது இடங்களில் கண்காணிப்புக் கமரா பொருத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. ஒரு கமராவுக்கு ஒருநாளுக்கு 750 ரூபா செலுத்த வேண்டும் எங்களுக்கு கமரா கொள்வனவு செய்வது தொடர்பிலோ பொருத்துவது தொடர்பிலோ செலவு இல்லை என கௌரவ தவிசாளர் அவர்களால் குறிப்பிடப்பட்டது. இது தொடர்பில் உறுப்பினர்களிடையே கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்று கௌரவ தவிசாளர் அவர்களால் இரண்டு சபைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது அவர்களின் பெறுபேற்றை பார்த்து நாங்கள் முடிவெடுப்போம் என்றார்.

அடுத்தாக சுகாதரக்குழுக்கூட்ட அறிக்கையை சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு கௌரவ உறுப்பினர் த.துவாரகன் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வ.தனகோபி அவர்கள் வழிமொழிந்தார். திட்டமிடல் குழுக்கூட்ட அறிக்கை மற்றும் சனசமூக நிலையங்களின் குழுக்கூட்ட அறிக்கை என்பன இன்று வழங்கியமையால் அடுத்த கூட்டத்தில் அங்கீகரிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக கௌரவ தவிசாளர் சபை அமர்வை நடாத்த ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறி பி.ப. 02.15 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுறுத்தப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை பின்வருமாறு

தீர்மானம்:- 39/ 30.07.2025

எமது சபைக்குரிய சுன்னாகம் கொத்தியாலடி திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள சுழலும் உயிரியல் ஆலையை (RBC Plant) மாவட்டசெயலகம், நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் எமது சபையினுடைய பங்களிப்புடன் மீள இயங்கவைப்பதற்கு நடவடிக்கை கௌரவ ஆளுநர் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளது. ஆறுமாதங்கள் அல்லது ஒருவருட காலப்பகுதியில் அது சீராக இயங்கும் பட்சத்தில் எமது சபை ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு சபைபெறுப்பேற்று அதனை இயக்குவதாக ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ தவிசாளர் தியாகராசா பிரகாஷ்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இ.அரிகரன்

தீர்மானம்:- 40/ 30.07.2025

சபைநிதி மூலம் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை நிகழ்நிலைப்படுத்தி கண்காணித்தல் தொடர்பாக பொறிமுறை ஒன்றை உருவாக்கவதற்கு சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ தவிசாளர் தியாகராசா பிரகாஷ்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இ.அரிகரன்

தீர்மானம்:- 41/ 30.07.2025

சபைநிதி மூலம் தலைமை அலுவலகத்திற்கு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 10,000,000.00 நிதியில் மின் தூக்கி அமைப்பது என சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ தவிசாளர் தியாகராசா பிரகாஷ்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் தி.அன்ரன்லீனஸ்



CamScanner

தீர்மானம்:- 42/ 30.07.2025

சபைநிதி மூலம் தலைமை அலுவலகத்தில் மின்பிறப்பாக்கி பொருத்துவதற்கு சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ தவிசாளர் தியாகராசா பிரகாஷ்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

தீர்மானம்:- 43/ 30.07.2025

சபைநிதி மூலம் தலைமை அலுவலகத்தில் நிகழ்நிலை மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு உரிய வசதிகளை மேற்கொள்வதற்கு சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ தவிசாளர் தியாகராசா பிரகாஷ்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் தி.அன்ரன்லீனஸ்

தீர்மானம்:- 44/ 30.07.2025

பிரதேசசபை மாநாட்டு மண்டபத்திலுள்ள AC திருத்தியமை தொடர்பாக மோசடி இடம்பெற்றிருக்க வாய்ப்புக்கள் உள்ளதாக கருதி இதனை விசாரணை செய்துதருமாறும் மற்றும் கடந்த சபையின் காலப்பகுதியில் கொத்தியாலடி குப்பைமேடு அகற்றியமை தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கலாம் என்பதால் அது தொடர்பாகவும் விசாரணை செய்துதருமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவது என சபையால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சி.லகிந்தன்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

தீர்மானம்:- 45/ 30.07.2025

முடிவடைந்த பின்வரும் வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதற்கு சபையில் ஏகமனதான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. வேலைகளின் விபரம் பின்வருமாறு.

| இல | வேலைத்திட்ட விபரங்கள் | கோரப்படும் கொடுப்பனவுச் சிட்டைத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | ஈவினை இந்து மயான சுற்றுமதில் அமைத்தல் | 2,177,505.54 | Baba Civil Engineering |
| 2 | வாகனதரிப்பிடம் அமைத்தல் , சுன்னாகம் உப அலுவலகம்<br>பூவோடை இந்துமயானம் நுழைவாயில் கதவு அமைத்தல் | 866,229.00 | STS Civil Engineering & Construction |
| 3 | ஆலங்கட்டை தோட்டவீதி அமைத்தல், ஏழாலை வடக்கு<br>கலைமகள் வீதியின் உப வீதி அமைத்தல், ஈவினை | 1,388,373.51 | Banusha Transport nilayam |
| 4 | அறுமன் கலட்டி வீதி 1ம், 2ம் குறுக்கு வீதி அமைத்தல், ஏழாலை தெற்கு<br>குருந்தடி வீதி புனரமைத்தல், ஏழாலை தெற்கு | 1,358,787.58 | Banusha Transport nilayam |
| 5 | தர்மலிங்கம் வீதி அமைத்தல் - கட்டம் -1-A | 4,007,783.04 | Nation Construction |
| 6 | பூவோடை 2ம் ஒழுங்கை அமைத்தல், சிவபூதவராஜர் 5ம் ஒழுங்கை அமைத்தல் | 1,432,159.93 | Mahaan Engineering & Hardware |



CamScanner

| | | | |
|---|---|---|---|
| 7 | 1. மயான வீதி 1ம் ஒழுங்கை உப ஒழுங்கை வீதி அமைத்தல், கந்தரோடை<br>2. கதிரமலை வீதி 4ம் ஒழுங்கை அமைத்தல் (இடது பக்கம்), சுன்னாகம் தெற்கு | 1,638,590.00 | Mahaan Engineering & Hardware |
| 8 | ஆயுர்வேத மருந்து கொள்வனவுக்கான கொடுப்பனவு | 511,150.00 | எவரெஸ்ட் பார்மசி, உசன், மிருசுவில் |

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சி.லகிந்தன்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இ.அரிகரன்

தீர்மானம்:- 46/ 30.07.2025

2017ம் ஆண்டு காலப்பகுதியில் செலுத்தப்படவேண்டிய VAT வரி கொடுப்பனவு 31.03.2017 காலப்பகுதிக்கு தண்டத்துடன் ரூபா 262,335.98 மற்றும் 01.07.20217 – 30.09.2017 காலப்பகுதிக்கு தண்டத்துடன் ரூபா 203,829.98 ஆகியவற்றில் தண்டப்பணம் தவிர்ந்த கொடுப்பனவு தொகை ரூபா 203,926.00 மட்டும் சபையால் கௌரவ ஆளுநரின் அனுமதியைப்பெற்று திரண்டநிதியில் கொடுப்பனவை மேற்கொள்வதென சபையால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் சி.லகிந்தன்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் தி..அன்ரன்லீனஸ்

தீர்மானம்:- 47/ 30.07.2025

சுன்னாகம், ஏழாலை, உடுவில் ஆகிய நூலகங்களுக்கு வெளிவாரி அடிப்படையில் இருந்த நூலக உதவியாளர்களின் ஒப்பந்த காலம் முடிவடைந்தமையால் கேள்விகோரி ஒருவருடத்துக்கு ஒப்பந்தம் செய்வது என சபையால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இ..அரிகரன்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

தீர்மானம்:- 48/ 30.07.2025

தற்போது இளைஞரிடையே அதிகரித்து வரும் குற்றச்செயல்களை குறைத்து அவர்களது உடல் உளஆரோக்கியம், உடற்தகுதியை மேம்படுத்தும் நோக்கிலும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உயர்தரத்திலான உள்ளக விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும், யாழ் மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான அனைத்து உள்ளக விளையாட்டுக்களையும் உள்ளக்கியவாறான சர்வதேச தரத்திலான உள்ளக விளையாட்டரங்கு இல்லாமையால் எமது சபையின் பெயரில் நிலையான வைப்பில் உள்ள 100 மில்லியன் பணத்தினை கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்று அந்நிதி மூலம் சர்வதேச தரத்திலான உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைப்பதற்கு சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்



CamScanner

தீர்மானம்:- 49/ 30.07.2025

கந்தரோடை விகாரைப்பகுதியில் தனிநபரினால் அறவிடப்படும் வாகன தரிப்பிடத்திற்கான கட்டணம் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கான கட்டணத்தினை நிறுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுப்பதாக ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 50/ 30.07.2025

கந்தரோடை விகாரைப்பகுதியில் புதிதாக அனுமதியற்ற முறையில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டவேலையை நிறுத்துவதாகவும் புதிய கட்டங்களை அப்பகுதியில் சபையினுடைய அனுமதியை பெற்று அமைக்கப்பட வேண்டும் என சபையினால் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 51/ 30.07.2025

சபையில் பாவனையின்றிக்காணப்படும் கழிவுறிஞ்சி வாகனம், நீர்தாங்கி என்பவற்றை கௌரவ ஆளுநரின் அனுமதியை பெற்று ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்து அதன் மூலம் வரும் பணத்தில் புதிய கழிவுறிஞ்சும் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வது என்ற தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 52/ 30.07.2025

சபையின் எல்லைக்குள் காணப்படும் தனியார் நிறுவனங்களின் விளம்பர பதாதைகள் ஒட்டுதல், காட்சிப்படுத்துதல் என்பவற்றுக்கு கட்டணம் வசூலிப்பதற்கும் அனுமதிகளை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 53/ 30.07.2025

சபையின் எல்லைக்குள் வீதியோரங்களில் கழிப்புக் கழிப்பதனை தடைசெய்து மயானங்களில் அதனை போடுவதற்கு பிரிவுக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பதுடன் சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அறிவுறுத்தல் கடிதம் வழங்குவது என தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்



CamScanner

தீர்மானம்:- 54/ 30.07.2025

சபையின் எல்லைக்குள் மரணகீதம் இசைக்கும் வாகனத்திற்கான அனுமதியை சபையினூடாக வழங்குவதனுடன் அவர்களுக்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்படல் வேண்டும் என்ற தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உ.தயகுமாரன்

தீர்மானம்:- 55/ 30.07.2025

இரும்பு, பிளாஸ்டிக், மற்றும் பழைய பொருட்கள் சேகரிக்கும் வாகனங்களை சபையில் அனுமதியை பெற்று சபையின் எல்லைக்குள் இச்செயற்பாட்டில் ஈடுபடவேண்டும் என்ற தீர்மானம் சபையில் ஏகமனதாகத் நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உ.தயகுமாரன்

தீர்மானம்:- 56/ 30.07.2025

சபைக்கு சொந்தமான சகல வாகனங்களுக்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை என்னும் பெயருடன் சபையினுடைய இலச்சினையையும் பொறித்த ஸ்ரிக்கர் ஒட்டுவது என தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உ.தயகுமாரன்

தீர்மானம்:- 57/ 30.07.2025

வெளிமாவட்டங்களில் இருந்து தற்காலிகமாக எமது பிரிவிலுள்ள வீடுகளில் தங்கியுள்ளோர்களை பிரதேச செயலாளர் ஊடாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்ற தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உ.தயகுமாரன்

தீர்மானம்:- 58/ 30.07.2025

இராமநாதன் நுண்கலைப் பீடத்திற்கு அண்மையில் தங்கியிருந்து கல்விகற்கும் மாணவர்கள் காலையில் குப்பைசேகரிக்கும் வாகனங்கள் குப்பை சேகரிக்கும் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் வீதிகளில் குப்பைகளை வீசுவது அதிகமாகக் காணப்படுகின்றமையால் அது தொடர்பில் மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காக நுண்கலைப்பீட பீடாதிபதிக்கு கடிதம் அனுப்புவது என தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உ.தயகுமாரன்



CamScanner

தீர்மானம்:- 59/ 30.07.2025

வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வட்டாரத்தில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு ஏற்றவகையில் சனசமூக நிலையங்களில் இடங்களை ஒதுக்கி வழங்குவதுடன் இவர்களுக்குரிய கடமைகளை கௌரவ தவிசாளரும் வழங்க வேண்டும் என தீர்மானம் சபையில் ஏகமனதாகத் நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 60/ 30.07.2025

சபையினால் 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்ட கடைகளின் உரிமையாளர்கள் அல்லாத வேறு நபர்களால் நடாத்தப்படும் கடைகளை உரிமையாளர்களின் சம்மதத்துடன் 20 வருட வாடகையை முற்பணமாக செலுத்தும் பட்சத்தில் உரிமை மாற்றம் செய்வது எனவும் 20 வருட முற்பணத்தினை 6 மாத தவணை அடிப்படையில் கட்டங்களாக செலுத்துவதற்கு இலகுபடுத்துவதாகவும் எனினும் முழுத்தொகையும் செலுத்தப்பட்டதன் பின்னரே உரிமை மாற்றம் செய்யப்படும் என தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 61/ 30.07.2025

இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக வீதி அகலிப்பின் போது இடிக்கப்பட்ட பயணிகள் நிழற்குடை இருந்த இடத்தில் கணகரட்னம் புஸ்பமலர் என்பவரால் மயிலு கனகரட்ணம் ஞபகார்த்தமாக பயணிகள் நிழற்குடை ஒன்றை அமைப்பதற்கு தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

வழிமொழிந்தவர் - கௌரவ உப தவிசாளர் செ.உதயகுமாரன்

தீர்மானம்:- 62/ 30.07.2025

சபைக்குரிய வீதிகளுக்கு பெயர்பலகை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துவது என தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் அ.ராஜ்நிமால்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.உதயராஜ்

தீர்மானம்:- 63/ 30.07.2025

சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு கனடா அபிவிருத்தி ஒன்றியத்தால் அமைக்கப்படவுள்ள மின்தகன மேடைக்கு சபை அனுமதி வழங்குவது என தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் இ.அரிகரன்



CamScanner

தீர்மானம்:- 64/ 30.07.2025

சிறியளவிலாவது சபைக்கு ஒரு தீயணைப்பு பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் பா.சுரேஸ்குமார்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் மு.நவலோகராஜா

தீர்மானம்:- 65/ 30.07.2025

சபைக்குரிய பாரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக ஆலோசனை நிறுவனம் ஒற்றை பத்திரிக்கை விளம்பரம் மூலம் கோரியுள்ளோம். online மூலமாகவும் கடிதம் மூலமாகவும் பலர் விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களது அனுபவத்தை பார்த்து செய்யவுள்ள வேலைத் திட்டங்களை வழங்கி யார் குறைந்தளவிலான சதவீதத்தை கோருகின்றார்களோ அந்நிறுவனத்தினை தெரிவு செய்யலாம் என்ற தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ தவிசாளர் தி.பிரகாஷ்

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் மு.நவலோகராஜா

தீர்மானம்:- 66/ 30.07.2025

கந்தரோடைப்பகுதியில் அமைந்துள்ள குளத்தினை சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அறிவித்து ஆகாயத் தாமரையை அகற்றிசுத்தப்படுத்தி சுற்றுலா தளத்துக்கு ஏற்றவகையில் அழகுபடுத்தும் செயற்பாட்டை செய்வதென சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்மொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் மு.நவலோகராஜா

வழிமொழிந்தவர் - கௌரவ உறுப்பினர் த.துவாரகன்

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்

அழகேசன் பிரதீபன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.



CamScanner